# குடியரசு தின விழா

மார்த்தாண்டம், ஜன. 30–

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரியில் குடியரசு தின விழா நடந்தது.

கல்லூரி தாளாளர் ராஜதுரை தேசிய கொடியேற்றினார். துணை முதல்வர் பிஜூ வரவேற்றார். முதல்வர் பால்ராஜ் தலைமை வகித்தார். ஆண்டு மலர் வெளியிடப்பட்டது. ஜோஸ் பால் ஆண்டு மலரை அறிமுகம் செய்தார். கலை நிகழ்ச்சிகள் நடந்தது. என்.சி.சி மாணவ மாணவிகளின் அணி வகுப்பு நடந்தது. என்.சி.சி தலைவர் கேப்டன் பாயின்ட் வெஸ்லி நன்றி கூறினார். கல்லூரி ஆட்சி மன்ற குழு உறுப்பினர் சாம்சுந்தர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

